**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.163/2019**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 25 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆண்டிச்சாமி | ஜாதி | : | |
| த.பெ | : | மொக்கைய கவுண்டர் | தொழில் | : | பெயிண்டர் |
| கிராமம் | : | ஆரியநல்லூர் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 75/2026 |
| தேதி | : | 25.03.2026 | | | |

**10** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

முன்னிலைகோட்டை கிராமத்திற்கும் ஆரியநல்லூருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எந்தெந்த சர்வே எண்கள் சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எந்தெந்த சர்வே எண்களில் எத்தனை விஸ்தீரணம் என்றும் அதன் நான்குமால்கள் என்ன என்றும் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த சர்வே எண்களில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது, எந்த சர்வே எண்களில் என்னென்ன மரம் உள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.**எந்த சர்வே எண்களில் கிணறு உள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். 2 முதல் 8 பிரதிவாதிகளை எனக்கு யாரென்று தெரியாது.** 12 ஆம் பிரதிவாதி மரிய தெரஸ், மரிய சூசை ஆகியோரை தெரியுமா என்றால் மரிய சூசையை மட்டும் தெரியும். மரிய சூசைக்கு எத்தனை வயது இருக்கும் அவர் எங்கு உள்ளார் என்றால் மரிய சூசைக்கு 80 வயது இருக்கும் , அவர் ஆரியநல்லூரில் உள்ளார். சொத்துக்கள் சம்மந்தமாக பட்டா எண் என்ன என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பட்டாக்கள் யார் பெயரில் இருந்தது என்றால் முதலில் அருளப்பன் சேர்வை பெயரிலும் அவர் இறந்த பிறகு சந்தியாகு சேர்வை பெயரிலும், அவர் இறந்த

பிறகு அவருடைய மகன்கள் மற்றும் மகள்கள் பெயரில் கூட்டாக உள்ளது.  சந்தியாகு சேர்வைக்கு 3 பெண் பிள்ளைகளும், 2 ஆண் மகன்களும்  உள்ளார்கள். நீங்கள் சொல்வது போல் பட்டா யாருடைய பெயரிலும் கூட்டாக இல்லை என்றும் நீங்கள் தவறாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் உங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை , வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் மரிய சூசையிடம் சென்று  எப்பொழுதும் சொத்து சம்மமந்தமாக பேசவில்லை என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor